# தேசிய தொழிற் கற்கை நிறுவனம்
# தொழில் அமைச்சு

**(இரண்டாம் நிலை அடிப்படையில் – இரண்டு ஆண்டுகளுக்காக)**

---

தொழில் அமைச்சின் கீழ் இயங்கும் மற்றும் 2010 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தேசிய தொழிற் கற்கை நிறுவனச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட தேசிய தொழிற் கற்கை நிறுவனத்தில் காணப்படும் பதவி வெற்றிடத்தின் பொருட்டு, பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ளவர்களிடமிருந்து இரண்டாம் நிலை அடிப்படையில் (secondment basis) சேவை செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரிகள் தேசிய தொழிற் கற்கை நிறுவனம் நடாத்தும் நேர்முகப் பரீட்சையின் பின்னர், வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள்.

**01 . பணிப்பாளர் நாயகம் - வெற்றிடத்தின் எண்ணிக்கை 01**

(அ) சேவை தொகுதி - சிரேஷ்ட முகாமைத்துவம் ( HM 2-1)

(ஆ) பதவிக்கு ஒப்படைக்கும் பணிகள்

நிறுவனத்தின் ஆளுகைச் சபையால் தீர்மானிக்கப்படும் கொள்கைகளைச் செயல்படுத்துதல், மேற்பார்வையிடுதல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகிய பணிகளை நிறுவனக் கட்டமைப்பு ஊடாக நிறைவேற்றும் பிரதான நிறைவேற்று அலுவலர் ஆவார். இவர் இந்த முழுமையான செயற்பாடு தொடர்பில் ஆளுகைச் சபைக்குப் பொறுப்புக் கூறுதல் வேண்டும். அதன்படி, ஆளுகைச் சபையின் வழிகாட்டுதல் மற்றும் கட்டுப்பாட்டின் கீழ், ஆளுகைச் சபையால் வழங்கப்படும் பணிகள் மற்றும் அதிகாரங்களைச் செயற்படுத்துவதன் மூலமும், நிறுவனத்தின் ஏனைய ஊழியர்களுக்கு வழிகாட்டி தலைமைத்துவம் வழங்குதல் மற்றும் ஊக்குவிப்பதன் மூலமும் நிறுவனத்தின் ஒட்டுமொத்த நோக்கத்தை நிறைவேற்றுதல் இந்த பதவிக்குரிய பணிகளாகும்.

**(இ) சம்பளம்**

நிலையான பதவிக்குரிய முழுமையான சம்பளம் மற்றும் இரண்டாம் நிலை அடிப்படையில் (secondment basis) பதில் கடமையாற்றும் பதவிக்குரிய ஆரம்பச் சம்பளத்தில் 1/4 ஆன இரண்டாம் நிலை கொடுப்பனவு.

**(ஈ) தகைமைகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானம்/ வியாபார நிர்வாகம்/ முகாமைத்துவம்/ கலை/ சட்டம் ஆகிய துறையில் அடிப்படை பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

விஞ்ஞானம்/வியாபார நிர்வாகம்/ முகாமைத்துவம்/ கலை/ சட்டம் விடய துறையில் அடிப்படை பட்டம் முடித்த பின்னர் முதுமானிப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

முதல் பட்டப்படிப்பை முடித்த பின்னர், அரச சேவையிலுள்ள ஒரு நிறுவனத்தில் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தது 20 வருட கால அனுபவம் இருத்தல் வேண்டும் (இதில் குறைந்தது 5 வருட அனுபவம் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் இருத்தல் வேண்டும்).

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானம்/ வியாபார நிர்வாகம்/ முகாமைத்துவம்/ கலை/ சட்டம் ஆகிய துறையில் அடிப்படை பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்

அத்துடன்

விஞ்ஞானம்/வியாபார நிர்வாகம்/ முகாமைத்துவம்/ கலை/ சட்டம் விடய துறையில் அடிப்படை பட்டம் முடித்த பின்னர் முதுமானிப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

டாக்டர் பட்டப்படிப்பை முடித்த பின்னர் அரச சேவையிலுள்ள ஒரு நிறுவனத்தில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தது 5 வருட அனுபவம் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் இருத்தல் வேண்டும்.

**02. ஆட்சேர்ப்பு முறை**

நியமன அதிகாரியால் நியமனம் செய்யப்படும் சபை மூலம் நடாத்தப்படும் கட்டமைவு முறையிலான நேர்முகப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

**03. ஏனையவை**

**(அ) ஒவ்வொரு விண்ணப்பத்தாரியும்**

(i) இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) பதவிக்கு ஒதுக்கப்படும் பணிகளைச் சிறப்பாகச் செய்யவும், நாட்டில் எந்தப் பகுதியிலும் சேவை செய்வதற்கு தேவையான சிறந்த தகைமையுடன் இருத்தல் வேண்டும்.

(iii) சிறந்த நல்லொழுக்கத்தைக் கொண்டுள்ளவராக வேண்டும்.

**(ஆ) சேவை நிலையம்**

நாராஹேன்பிட்டியவில் உள்ள தொழில் செயலகத்தின் இரண்டாவது மாடியில் அமைந்துள்ள தேசிய தொழிற் கற்கை நிறுவகம் சேவை நிலையமாகும்.

**04 .விண்ணப்பிக்கும் முறை**

இந்த அறிவிப்பின் இறுதியில் வழங்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின்படி, A4 அளவு காகிதத்தின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பத்தை தயார் செய்துக் கொள்ளுதல் வேண்டும். முதல் பக்கத்தில் 01 முதல் 03 வரையிலான பந்திகளையும், மீதமுள்ளவை அடுத்த பக்கங்களில் இருக்கும் வகையிலும் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை பூர்த்தி செய்து கல்வி, தொழிற் தகைமைகள் மற்றும் அனுபவம் தொடர்பான தகைமைகளை உறுதி செய்வதற்கு பிரதிகளுடன் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். மேலும், தற்போதும் அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பத்தாரிகள் தமது விண்ணப்பங்களை நிறுவனத் தலைவர்கள் ஊடாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். குறிப்பிட்ட மாதிரி படிவத்திற்கு இணங்காத மற்றும் சான்றளிக்கப்பட்ட நகல்கள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள், எந்தவொரு காரணமும் கூறப்படாமல் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பங்கள் அடங்கிய கடித உறையின் மேல் இடது மூலையில் உரிய பதவி குறிப்பிடப்பட்டு 2025.08.14 திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் கீழ்க்காணும் முகவரிக்கு கிடைக்குமாறு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

இந்தப் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு தொடர்பான இறுதி முடிவு தேசிய தொழிற் கற்கை நிறுவனத்தின் ஆளுகைச் சபைக்கு உரியதாகும்.

தொலைபேசி இலக்கம் - 0112 786541
மின்அஞ்சல் முகவரி nilsprocurementunit@gmail.com
இணையத்தளம் www.nils.gov.lk

பணிப்பாளர் நாயகம்
தேசிய தொழிற் கற்கை நிறுவனம்
2 ஆவது மாடி
தொழிற் பொதுச் செயலகம்
கொழும்பு 05